# மின்நிலா

நவம்பர் 23, 2020



engalblog.blogspot.com

எங்கள் ப்ளாக் பதிவுகளின் வாராந்திர தொகுப்பும், மற்றும் சில சுவையான பகுதிகளும், படங்களும் ...
இந்த மின்நிலா புத்தகத்தைப் பற்றிய உங்கள் கருத்துகளையும், யோசனைகளையும் ...
engalblog@gmail.com
என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.
நன்றி.

**Layout by : KGG :**

**============**


**ஆசிரியர்கள் :**

**B SRIRAM**

**K G GOUTHAMAN**

**KAYJEE**

**K G Y RAMAN**

**K S**



மின்நிலா 026 (முந்தைய இதழ் சுட்டி)

# பொருளடக்கம் பக்கம் எண்

மதூர் தால் மேத்தி அடை - பானுமதி வெங்கடேஸ்வரன் ரெஸிப்பி....................................2
குறிமேடை :: சிறுகதை :: துரை செல்வராஜூ.........................................................................5
கேள்வி பதில்........................................................................................................................12
எங்கள் ஆசிரியர்கள் எழுதிய மின்னூல்கள் ................................................................................14
யார் தச்ச சட்டை ? ஸ்ரீராம்.................................................................................................16
கதம்பம் :: ஸ்ரீராம்............................................................................................................19
பாட்டும் பதமும் :: ஸ்ரீராம்................................................................................................24
நேர்மறை செய்திகள்...........................................................................................................26
மார்வாடிகளின் வணிக ரகசியம்! :: ஜீவன் தாஸ்..................................................................31
மைசூர் அரண்மனைக் காட்சிகள் தொடர்கின்றன kayjee...........................................................34

குறிப்பு :

நீல நிறத்தில் காணப்படும் தலைப்புகள் கொண்டவை இந்த மின்நிலா இதழில் மட்டும் வெளியிடப்படுபவை. மற்றவை அனைத்தும் சென்ற வார எங்கள் பிளாக் வலைப்பூவில் வெளியிடப்பட்டவை.

## மசூர் தால் மேத்தி அடை - பானுமதி வெங்கடேஸ்வரன் ரெஸிப்பி



தேவையான பொருள்கள்:





மசூர் தால் --- 1 1/2 ஆழாக்கு
கெட்டி அவல் --- 3/4 ஆழாக்கு

## மின்நிலா 027

சாமை, அல்லது திணை அல்லது குதிரைவாலி அரிசி -- 1/2 ஆழாக்கு
வெந்தயக்கீரை --- ஒரு கட்டு
மிளகாய் வற்றல் ---- 9
பெருங்காயம் --சிறிதளவு
உப்பு --- தேவையான அளவு

செய்முறை:
முதலில் மசூர் தால், சாமை அல்லது தினை அரிசி, மிளகாய் வற்றல் இவைகளை கழுவி ஊற வைக்கவும். இரண்டு மணி நேரம் ஊறினால் போதும்.

அரைப்பதற்கு பத்து நிமிடம் முன்பு அவலை கழுவி ஊற வைக்கவும். பின்னர் எல்லாவற்றையும் மிக்சியில் சற்று கொர கொரப்பாக அரைத்து, அந்த மாவில், ஆய்ந்து சுத்தம் செய்யப்பட்ட வெந்தய கீரையை பொடியாக நறுக்கி சேர்த்து



நன்கு கலந்து சாதாரண அடை வார்ப்பது போலவே வார்த்து எடுக்கவும்.



சுவையான, சத்தான, மிருதுவான அடையை அவரவர் விருப்பம் போல வெண்ணை, மிளகாய்ப்பொடி, வெல்லம் என்று எதோடு வேண்டுமானாலும் சாப்பிடலாம். நான் சுண்டா என்னும் இனிப்பு மாங்காய் ஊறுகாயோடு சாப்பிட்டேன்.

இதற்கு கறிவேப்பிலை போட தேவையில்லை.

ரேவாஸ் கிச்சன் என்னும் யூ டியூப் சேனலில் பார்த்தேன். என்ஜாய் மாடி!




[மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்]()

# குறிமேடை :: சிறுகதை :: துரை செல்வராஜூ

மௌனம் கனத்திருந்தது பூஜை அறைக்குள்...

பதினாறு திருக்கரங்களையும் சிறகு போல விரித்துக் கொண்டு மண்டையோட்டு மாலையுடன் வடக்கு முகமாக ஸ்ரீபத்ரகாளியின் சித்திரம்...

கனல் தெறிக்கும் விழிகள்.. இரத்தக் களரியுடன் நீண்டிருக்கும் நாக்கும் கோரைப் பற்களும் பார்ப்பவர்க்கு அச்சத்தை ஊட்டிக் கொண்டிருந்தன..

காளியின் சித்திரத்துக்குக் கீழாக எலுமிச்சம் பழங்கள், தகடுகள், சிவப்பு நிற முடிகயிறுகள்...

அருகில் நாலடி உயரத்துக்கு பித்தளைச் சூலம்...

பேய் பிசாசுகள் அதைக் கண்டால் அலறியடித்துக் கொண்டு ஓடி விடும்...

குறிமேடை அபிஷேகம் என்றால் அந்த சூலாயுதத்துக்குத் தான்...

அதில் தான் ஜடாமுனி ஆவாகனம்...

நரைத்த மீசை தாடியுடன் அருள் வாக்கு சொல்லும் ஜடாமுனி பூசாரியார் -

என்ன வாக்கு சொல்லப் போகிறாரோ!..   - என்று தவித்திருந்தவர்கள் நால்வர்..

அவர்கள் கதிர்வேல், அவனுடைய அம்மா, அப்பா, மாமா...

கதிர்வேல் வளைகுடாவின் குவைத் நாட்டில் நல்லதொரு வேலையில் இருப்பவன்.. முப்பது வயதை நெருங்கியும் திருமணத்தை நெருங்க முடியவில்லை...

பத்துப் பொருத்தம் கூடி வந்தாலும் ஏதாவதொரு காரணம் தட்டி விட்டுவிடும்..

அங்கே இங்கே என்று கோயில் கோயிலாக அலைந்தாயிற்று...

புண்ணியங்கள் வரவானதே தவிர பூமாலைக்கு வழியைக் காணோம்...

யாரோ சொன்னதைக் கேட்டு காளியம்மன் குறிமேடைக்கு வந்திருக்கிறார்கள்..

பூசாரியார் தனக்கு முன்னிருந்த நவாம்ச சக்ர மண்டலத்தை உற்று நோக்கிக் கொண்டிருந்தார்..

கோயில் மாதிரி இருந்த வீடு முழுதும் மின் வசதி இருந்தும் இந்த பூஜை அறைக்குள் மட்டும் மின் விளக்குகள் இல்லை...

மூன்று நான்காக குத்து விளக்குகள் ஒளிர்ந்து கொண்டிருந்தன...

சுத்தமான நல்லெண்ணெய்யின் வாசம்.. கூடவே ஜவ்வாது சம்பங்கி கதம்பம் ஊதுவத்தி சாம்பிராணி - என நறுமணம் கமழ்ந்து கொண்டிருந்தது...

திடீரென உடலைச் சிலிர்த்துக் கொண்ட பூசாரியார் அருகிலிருந்த கற்பூரக் கட்டியை ஏற்றி விபூதித் தட்டில் வைத்தார்..



கற்பூரத்தின் சுடர் அறை முழுதும் பரவியது. .

சம்படத்தில் இருந்த சோழிகளைக் கையில் அள்ளித் தரையில் விசிறினார். . .

மேல் நோக்கிப் பூத்திருந்தவற்றை எண்ணிக் கொண்டே – எலுமிச்சம் பழம் ஒன்றை எடுத்து கதிர்வேலின் உச்சந் தலையில் வைத்து உள்ளங்கையால் அழுத்திக் கொண்டார். .

அவனுக்கு முதுகுத் தண்டினுள் மின்சாரம் இறங்குவது போல் இருக்க – பூசாரியாரிடமிருந்து பாட்டு ஒன்று பிறந்தது. .

" கேளப்பா பாலகனே. . ஏதிலியாய் நிற்பவனே. .

பாரப்பா பழங் கொடுமை பஞ்சமா பாதகத்தை
நீயப்பா செய்ததுவும் நெடுமுள்ளாய் நிற்குதப்பா
வார்குழலாள் தனைக் கூடி வஞ்சனையும் செய்தனையே
கூறப்பா உன்மனதில் சூலி என்றும் பாராமல்
தீரப்பா இச்சென்மம்  என்றவளும் செயல் மாண்டு போயினளே..
தீர்பழியாய் என்று எரிந்து சிவலோகம் சென்றனளே..
நாளப்பா ஆண்டதுவும் ஐம்பதோடு மூவிரண்டு
நல்லதொரு பரிகாரம் நாள் பார்த்துச் செய்தக்கால்
குத்துவிளக்கு ஏற்றி வைக்க குலமகளும் வருவாள் தானே!.. ”

உச்சந்தலையில் இருந்த எலுமிச்சையை எடுத்து தரையில் வைத்து நசுக்க –

நாலாபுறமும் அதன் சாறு பீறிட்டு அடித்தது...

கதிர்வேலின் அம்மா கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டாள்..

” இதோ..  இந்த ஜென்மத்தில உங்க மகனா இருக்கிற இந்த ஜீவனால முன்னூறு வருசத்துக்கு முன்னால அபலை பெண்ணொருத்தி கர்ப்பமாகி அநாதரவா மாண்டு போனாள்... அக்கினியில எரிஞ்ச அவளோட சாபம் தான் இன்னைக்கு பின்னால நிக்கிறது... இது நீங்க வைத்தீஸ்வரன் கோயில் நாடி ஜோசியத்துல கேட்ட சேதி தானே!.. ”

பூசாரியார் பாட்டுக்கு விளக்கம் சொன்னதுடன் கேள்வியும் கேட்டு வைத்தார்...

” ஆமாங்க... சாமி... அங்கேயும் இதே தான் சொன்னாங்க... ”

” அப்புறம் என்ன சந்தேகம்?... ஆழம் பார்க்க வந்தீங்களா?.. ”

பூசாரியாரின் கண்களில் கொஞ்சமாக கோபம்...

” மன்னிக்க வேணும் சாமி!... காளியம்மா ஏதாவது நல்ல சேதி சொல்லாதா...ந்னு ஒரு ஆசைதாங்க!... ”

” ம்!... ” – தீர்க்கமாகப் பார்த்தார் பூசாரியார்

” இந்த சாபம் தீர்றதுக்கு வழியே இல்லீங்களா!?.. ”

” இருக்குது..ம்மா!.. ” – என்ற, பூசாரியார்

காளியம்மன் சித்திரத்துக்குக் கீழ் இருந்த எலுமிச்சம் பழத்தை எடுத்து கதிர்வேலின் தந்தையிடம் கொடுத்தார்...

″ இன்னும் மூணு மணி நேரத்துக்குள்ள வீட்டுக்குப் போய் சேர்ந்துடுங்க... வெளியாள் யார் கூடவும் அன்னம் தண்ணி தொடர்பு வச்சிக்காதீங்க.. யாரையும் வீட்டுக்கு உள்ளே விடாதீங்க.. விருப்பம் இருந்தா வெள்ளிக்கிழமை வாங்க.. மேற்கொண்டு பரிகாரம் பற்றி பேசலாம்.. இப்போ உடனே புறப்படுங்க!.. ″

ஜடாமுனி பூசாரியாரின் வாக்கை தலைமேல் கொண்டாலும் கலக்கத்துடன் அவர்கள் புறப்பட்டார்கள்..

நாட்கள் விறுவிறு என்று நகர்ந்தன..

அடுத்து வந்த வெள்ளிக்கிழமையன்று வீட்டில் படையல் போட்டு சர்க்கரைப் பொங்கலுடன் ஒரு சீப்பு பூவன் பழத்தைப் பசுவுக்கு வைத்தார்கள்...

கூறைப் புடவை, ரவிக்கைத் துணி, ஒரு வயதுடைய குழந்தைக்கான இடுப்புத் துணி ஆகியவற்றுடன் நூறு ரூபாயும் வைத்து ஏழைப் பெண் ஒருத்திக்கு தானமாகக் கொடுத்தார்கள்..

காதோலை கருகமணி, மல்லிகை சம்பங்கி மருக்கொழுந்து இவற்றுடன் தாம்பூலம் வைத்து ஆற்று நீரில் விட்டார்கள்..

எலுமிச்சம் பழத்தை அறுத்து அரக்குக் குங்குமத்தில் தோய்த்து வீட்டு வாசலில் பிழிந்து விட்டார்கள்..

பூசாரியார் சொன்னபடிக்கு எல்லாவற்றையும் செய்து முடித்து விட்டு பிள்ளையாருக்கு திருமுழுக்கு செய்து வஸ்திரம் சாத்தினார்கள்...

ஞாயிற்றுக்கிழமை சாயங்காலமாக மறுபடியும் குறிமேடைக்குச் சென்றபோது அவர்கள் கையில் ஒரு டஜன் கண்ணாடி வளையல்கள் இருந்தன...

அந்த வளையல்களை அங்கிருக்கும் வேப்ப மரத்தில் கட்டி விட்டார்கள்...

ஜடாமுனி பூசாரியார் புன்னகையுடன் உட்கார்ந்திருந்தார்...

″ சாமி!.. நீங்க சொன்னது மாதிரியே எல்லாம் செஞ்சிட்டோம்... அந்த சாபம் தீர்ந்திருக்குமில்லே!.. ″

# மின்நிலா 027

குறிமேடைக்கு மீண்டும் வந்திருந்தனர் கதிர்வேலின் குடும்பத்தினர்..

″ இது இவனுக்கு ஏழாவது ஜென்மம்.. அஞ்சாவது ஜென்மத்துலயே அந்தப் பொண்ணு சாந்தியடைஞ்சுட்டா.. ஆனா அந்த சாபத்தோட உக்கிரம் கிரகாதிபதிகள் கையில இருந்ததால வேகம் குறையலை... உதைச்சு விட்ட பந்து உருண்டு ஓடி ஒரு இடத்துல நிக்கிற மாதிரி இப்போ எல்லாம் சரியாப் போச்சு... ″

பூசாரியார் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு ஆச்சர்யம் தாள முடியவில்லை...

பூசாரியார் மேலும் தொடர்ந்தார்...

″ ஒவ்வொரு ஜென்மத்திலயும் நாம செய்யிற எல்லாத்துக்கும் புண்ணியம் பாவம் சேர்ந்துகிட்டே இருக்கு... அதனோட பலாபலன்களை நாம அனுபவிச்சுத்தான் தீரணும்.. லாபமோ நஷ்டமோ யாராலும் தடுக்க முடியாது... தப்பிக்க முடியாது!... ″

″ ஆயிரம் ஆயிரமா கையில பணம் இருக்கும்... அதை அள்ளிக் கொட்டி அது.. இதுன்னு செய்வான்... ஒரு பலனும் இருக்காது.. சோத்துக்கு வழியில்லாம இருக்குறப்போ அஞ்சு ரூபாய்க்கு விளக்கு ஏத்தி வைப்பான்.. இலவங்காய் மாதிரி பாவம் பட்டுன்னு வெடிச்சு சிதறிப் போகும்... ஏன்டா... இப்படி?... யாருக்கும் புரியாது!... ″

″ அப்படின்னா இப்போ செஞ்ச பரிகாரத்துக்கு அர்த்தம்!?.. ″

கதிர்வேலின் அம்மாவுக்குக் குழப்பம்..

″ அம்மா!.. பழைய பாவம் தீர்ந்த பிறகு தான் இந்த மாதிரி பரிகாரம் பூஜை புனஸ்காரம்.. ன்னு செய்ய முடியும்... அதுக்கு இடையில ஏதாவது செஞ்சிருந்தா அது உமிய வச்சி கோட்டை கட்டுன மாதிரி தான்... ″

″ ஏதோ நல்லபடியா எல்லாம் நடந்தா சரிங்க சாமி... ″

″ ஆகட்டும்... இப்போ உங்க மகன் கையில முடி கயிறு கட்டி விடுறேன்... இன்னையில இருந்து நாப்பத்தெட்டாம் நாள் அவிழ்த்து விடுங்க... ஆனா கவனம்... முடி கயிறு கழற்றப்போ எலுமிச்சம் பழம் நறுக்கிப் போடணும்.. எல்லாரும் செஞ்சிட முடியாது.. ″

″ அதான் பரிகாரம் செஞ்சிட்டோமே!.. இன்னும் பிரச்னை இருக்குதுங்களா?.. ″

கதிரின் அப்பா தயக்கத்துடன் கேட்டார்..

″ தூற்றல் விட்டாலும் தூவானம் விடாது.. ன்னு சொல்லுவாங்க... இல்லையா!... ″

பூசாரியார் புன்னகைத்தார்..

″ சாமீ... ரெண்டு மாச லீவுல வந்தேன்.. இன்னும் ஒரு மாசத்துல திரும்பிப் போகணும்... அங்க யாரு இந்த மாதிரி செய்வாங்க?... ″

கதிர்வேலிடமிருந்து கேள்வி...

பூசாரியாரிடமிருந்து வெடிச்சிரிப்புடன் பதில் வெளிப்பட்டது...

″ பக்கத்துலதான் இருக்கிறானே... குங்குமப் பொட்டுக்காரன்!... ″
== == == ==
ஊரிலிருந்து திரும்பி வந்த கதிர்வேல் சொல்லச் சொல்ல திகைப்புடன் கேட்டுக் கொண்டிருந்தேன்...

ஆயிற்று...

நாற்பத்தெட்டாம் நாளன்று கதிரும் நானும் கடற்கரைக்குச் சென்றோம்..

எலுமிச்சம் பழத்தை அறுத்து வீசியதுடன் கதிர்வேலின் கையிலிருந்த முடி கயிறையும் அவிழ்த்து கடல் நீரில் விட்டேன்...

அலைகள் இல்லாமல் ஆடிக் கொண்டிருந்தது கடல்...

கை கால்களைக் கழுவிக் கொண்டு அறைக்குத் திரும்பி காஃபி அருந்தினோம்..

பூசாரியார் குறிப்பிட்ட குங்குமப் பொட்டுக்காரன் - நான்தான் என்பது கதிர்வேலின் அசைக்க முடியாத நம்பிக்கை...

இது நடந்து ஒன்றரை மாதம் ஆவதற்குள் வீட்டிலிருந்து பெண்ணின் படத்துடன் கடிதம் வந்திருந்தது -

″ நிச்சயம் செய்து விட்டோம்!.. ″ - என்று...

″ இதோ வந்து விட்டேன்!... ″ - என்று பதில் எழுதிப் போட்டதோடு மின்னல் வேகத்தில் பெட்டியைக் கட்ட ஆரம்பித்தான் கதிர்வேல்.
============= ============

# மின்நிலா 027

இன்றைய கதைப்பகுதியில், சகோதரர் துரை செல்வராஜ் அவர்களின் மன ஓட்டத்தில் விளைந்த கதை நன்றாக இருக்கிறது. சரளமான எழுத்து நடை.. படிக்கும் நாமே குறி மேடைக்கு முன் அமர்ந்திருப்பதாக ஒரு உணர்வு...அடுத்து குறி சொல்பவர் என்ன சொல்வாரோ என்ற தவிப்பு.. கதையென்று நினைக்காமல், உண்மையாகவே நினைக்க வைத்த விதத்தில் எழுதிய சகோதரர் துரை செல்வராஜ் அவர்களுக்கு பாராட்டுக்கள். முற்பிறவியின் பாப புண்ணியங்கள் ஒவ்வொரு பிறவியிலும் தொடர்வது உண்மைதான். அதனால்தான் துன்பங்கள் வரும் போது ″போன ஜென்மத்தில் என்ன பாவம் செய்தோமோ″ என நினைத்து வருத்தமடைகிறோம்.

கதை நன்றாக உள்ளது. ஒவ்வொரு வரிகளும் ஆழமாக மனதில் பதியும் வண்ணம் எழுதும் திறமை சகோதரர் இறைவனிடம் வாங்கி வந்த வரம். அவரின் அற்புதமான எழுத்துத் திறமைக்கு என் பணிவான வணக்கங்கள்.. வாழ்த்துக்கள்.

ஒவ்வொருவருக்கும் சமயத்தில்,தெய்வம் மனித வடிவில் அருகிலிருந்து உதவி செய்கிறது. கடைசியில் கதை நிஜமான சூழலை கொண்டதாகவும் தோன்றுகிறது. உண்மை கதையோ? இறுதியில் முன்ஜென்ம பாவங்கள் முற்றிலுமாக அகன்று, நல்ல வேளை வந்ததும் மணக்கோலம் காண கதிர்வேல் கிளம்புவதாக முடித்திருப்பது மன நிறைவாக உள்ளது. பகிர்வுக்கும் மிக்க நன்றி.
நன்றியுடன் : கமலா ஹரிஹரன்.

================

இந்தக் கதையின் நாயகன் கதிர்வேலின் உண்மையான பெயர் கணேசமூர்த்தி.. இங்கு தான் இருக்கிறார்... நிஜமான சம்பவத்தை கதை போல வழங்கியிருக்கிறேன்...
பூசாரியார் சொல்லிய ஜென்ம சாபத்துக்கான குறிப்பாட்டு இறைவன் வழங்கியது...

பூசாரியார் குறிப்பிட்டுச் சொல்லிய குங்குமப் பொட்டுக் காரன் நான் தான்... இங்கே கடற்கரையில் எலுமிச்சம் பழம் நறுக்கி விட்டு முடி கயிறை அவிழ்த்த போது நடந்த சம்பவம் அற்புதமானது...

நான்கு மாதங்களுக்கு முன் இரண்டாவது ஆண் குழந்தைக்குத் தந்தையாகியிருக்கிறார் திரு. கணேசமூர்த்தி...

ஆத்மார்த்தமான ஆன்மீக அனுபவங்களுக்குத் தோழமை இவர்தான்...
15 ஆண்டுகளுக்கு முன் இவருக்கு மாலையணிக்கப் பணித்தான் ஐயப்பன்...
48 நாட்களில் நாடு திரும்பி இருமுடி கட்டி மலைக்குச் சென்று ஐயனைத் தரிசித்தது இனிய அனுபவம்...

படிபூஜை தரிசனம் செய்தது அப்போது தான்.

சாமியே சரணம் ஐயப்பா. துரை செல்வராஜூ

மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்

# கேள்வி பதில்

ஏஞ்சல் :
1, உறங்கும் புலி உறங்காப்புலி இரண்டுக்கும் என்ன வித்தியாசம் ?
இதில் நாம் எதுவாயிருப்பது நல்லது ?

# அது நாம் என்னவாக இருக்கிறோம் என்பதை வைத்துத் தீர்மானிக்க வேண்டும்.
உறக்கமோ இல்லையோ, புலியாக இல்லாமல் கன்றாக இருக்க முடியுமானால்..

& உறங்கும் புலி = இடறிவிட்டால் ஆபத்து.
உறங்காப்புலி = எப்பொழுதும் ஆபத்து.
இரண்டில் உறங்கும் புலியே பரவாயில்லை.
நான் எப்பொழுதுமே பூசார் !

2, ஸ்பெஷல் மிக்ஸருக்கும் சாதா மிக்ஸருக்கும் என்ன வித்யாசம் ?
நாம் சாப்பிடும்போது //மிக்ஸர் சாப்பிடறாங்க // என்று தானே சொல்ல போறோம் :)))

# ஸ்பெஷல் ரகம் இரண்டு மு.ப கூட, கொஞ்சமாக அவல் , சுட்ட எண்ணெய் தவிர்ப்பு ?

& நாம் சாப்பிடும்போது 'மிக்ஸர் சாப்பிடறாங்க' என்றுதானே சொல்லுவாங்க - இந்த அவமானத்தை தவிர்ப்பதற்காகவே நான் ஸ்பெஷல் மிக்ஸர் குவியலிலிருந்து முதலில் முந்திரி பருப்பு, பாதாம் பருப்பு துகள்களை கபளீகரம் செய்துவிடுவேன். அப்புறம் யாராவது பார்த்து, 'மிக்ஸர் சாப்பிடுகிறேன்' என்று சொன்னாலும் கவலைப்படமாட்டேன்!

3, அதிகம் கோபப்படுவது ஆண்களா ? அல்லது பெண்களா ?

# என்னைக் கேட்டால் ஆண்கள்.

& என்னைக் கேட்டால் பெண்கள். (இன்றைய பின்னூட்டங்களில் இருக்கு எனக்கு கச்சேரி!)

4, எதை எங்கே சொல்கிறோம் என்பது முக்கியமா ? அல்லது எதை எப்போது சொல்கிறோம் என்பது முக்கியமா ??

# எதை எப்போதும் எங்கேயும் 'சொல்லாமல்' இருக்கிறோம் என்பதே முக்கியம்.

& இரண்டில், எதை எப்போது சொல்கிறோம் என்பதே முக்கியம்.

5, போன வருஷம் தாம்பரம் பகுதியில் குடியிருந்த ஒருவர் இந்த வருஷம் அண்ணாநகரில் குடி பெயர்ந்து பிறகு அடுத்த வருஷம் மைலாப்பூர் வீட்டுக்கு இடம்பெயர்வார் .இப்படி இடம் குடிபெயரும்போது இப்போதிருக்கும் இடம் பற்றி உயர்த்தியும் முன்னிருந்த இடங்கள பற்றி வாய்க்குவந்தபடி இழிவாய் பேசுவது முறையா ?

# அப்படி இழிவாகப் பேசுகிறார்களா என்ன ? பேசினால் தவறுதான். வேண்டுமானால் இப்போதைய இடத்தைப் புகழ்ந்து பேசிக்கொள்ளட்டும்.
நான் பார்த்தவரை முன்பு இருந்த இடமே சொர்க்கம் எனப் பேசுவோரே அதிகம்.

& இருக்குமிடம் சுவர்க்கம் என்று நினைப்பதில் தவறு இல்லை. ஆனால் இருந்த இடம் நரகம் என்று சொல்வது சரியான நிலைப்பாடு அல்ல.

நெல்லைத் தமிழன் :

ப்ரார்த்தனை பண்ணறோம்..நிறைய தடவை..ஆனால் எதுவும் நடப்பதில்லை. அது நடக்கும்போதுதான் நடக்கும். அப்போ ப்ரார்த்தனையால் என்ன பயன்?

# கடவள் கையில் பிரச்சினைகளை ஒப்படைத்து விட்டு அதன் பின் "எல்லாம் அவன் செயல்" என்ற பக்குவம் இருப்பவர்கள் தம் பிரார்த்தனை பலித்தாலும் அல்லாது போனாலும் அதனால் கலங்க மாட்டார்கள். அப்படியானவர்களுக்கே பிரார்த்தனை ஒரு பெரிய பலமாக இருக்கும். பிரார்த்தனை செய்வது பலனை வேண்டி அல்ல (மனப்)பக்குவத்தை வேண்டி என்ற நோக்கில் பாருங்கள்.

& ப்ரார்த்தனை செய்வது 'Urgent' சமாச்சாரங்களுக்காக அல்ல. காலம் கனியவேண்டும், அப்படிக் கனியும்போது எல்லாம் நன்றாக நடக்கவேண்டும் என்று நினைத்துதான். பிரார்த்தனை என்பது 'முதல் உதவி' அல்ல. முதல் உதவி செய்து முடித்துவிட்டு குணமடைவதற்காக பத்தியம் இருப்பதைப் போன்றது.

மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்

## எங்கள் ஆசிரியர்கள் எழுதிய மின்னூல்கள்




**LINK : INDIA :** https://www.amazon.in/dp/B08BYVY5C3
US : https://www.amazon.com/dp/B08BYVY5C3
UK : https://www.amazon.co.uk/dp/B08BYVY5C3




LINK : INDIA : https://www.amazon.in/dp/B08C2ZGBYJ
US : https://www.amazon.com/dp/B08C2ZGBYJ
UK : https://www.amazon.co.uk/dp/B08C2ZGBYJ




**LINK :**

**INDIA :** https://www.amazon.in/dp/B08CXBPPYN

**US** : https://www.amazon.com/dp/B08CXBPPYN

**UK** :https://www.amazon.co.uk/dp/B08CXBPPYN




**LINK :**

**INDIA :** **https://www.amazon.in/dp/B08NGRY76W**

**USA :** **https://www.amazon.com/dp/B08NGRY76W**

**UK :** **https://www.amazon.co.uk/dp/B08NGRY76W**

மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்

## யார் தச்ச சட்டை ? ஸ்ரீராம்

வெள்ளை சட்டைக்கும் எனக்கும் எப்போதும் ராசியே இருக்காது.

சின்ன வயதில் சீருடை வெளிர் நீல கால்சராயும், வெள்ளைச் சட்டையும். எல்லோர் கதையும் போல எனக்கும் சமயங்களில் தீபாவளிக்கு சீருடையாய் எடுத்து விட்டால் சௌகர்யமாய் இருக்குமே என்று எடுத்திருக்கிறார்கள்.

வகுப்பில் கிட்டத்தட்ட அனைவரும் வழுவழு என்று டிராயர் போட்டு வருவார்கள் சகாக்கள். அவர்கள் போட்டிருக்கும் வெள்ளைச் சட்டை பளீரென இருக்கும்.

என் சீருடை டிராயர் கொரகொரப்பாக, கெட்டியாக இருக்கும். சட்டை மழை சேறில் விழுந்த சட்டையை நன்றாய்த் துவைத்தால் எப்படி லேசான ரோஸ் நிறத்தில் இருக்குமோ அப்படி இருக்கும்! ஏனென்று தெரியாது. இதைக் குறையாகச் சொல்லவில்லை. அப்போதிருந்த நிலையையும், எங்கள் விருப்பத்தையும் சொல்கிறேன்.

என்னை விட கிழிசல் டிராயர் போட்டு வந்த மாணவர்கள் எல்லாம் இருந்தார்கள். மாலைச் சந்தையில் காய்கறி கடை வைத்திருந்த ஜான் கென்னடி அதில் ஒருவன். ஆறு மணிக்குமேல் கடைத்தெரு சென்றால் நல்ல பசுபுசுவென கீரைகள், பச்சையாய் புடலை, அழகான தஞ்சாவூர்க் கத்திரிக்காய் எல்லாம் அவன் கடையில் இருக்கும். ஒருமுறை மதிய உணவு இடைவேளையில் அவன் வீடு சென்றபோது இவை எல்லாம் அவன் வீட்டுத் தோட்டத்திலேயே விளைவிப்பது என்று தெரிந்தது. பூக்காரத் தெருவில் இருந்தது அவன் வீடு! வகுப்பறையில் அவன் டிராயர் ஓட்டைக்குள் பென்சிலை வைத்து அவனை வெறுப்பேற்றி விளையாடுவார்கள் சில மாணவர்கள்.

தூய வெண்மை நிறத்தினதாய் ஒரு சட்டை ஆங்கே எனக்கு வாங்கித் தரல் வேண்டும் என்று கோரிக்கை வைத்ததும் ஒருமுறை கதரில் வாங்கித் தரப்பட்டது. அது கொஞ்சம் பளிச்சென இருந்தது. ஆனால் துவைத்ததும் சல்லடை போலத் தெரியும்!

எங்களுக்கென்று - எனக்கும் என் அண்ணனுக்கும் - தஞ்சையில் ஒரு தையல்காரரைப் பிடித்து வைத்திருந்தார் அப்பா. ஏழுமலை என்று பெயர். வயதானவர். தெற்கு வீதியில் கடை வைத்திருந்தார். அளவெடுக்கவே தேவை இல்லை. எங்களை ஒருமுறை நேரில் பார்த்துக் கொள்வார். அவ்வளவுதான்.

**நீதி படம் பார்த்திருக்கிறீர்களா? அதில் சந்திரபாபு போட்டுக்கொண்டு வருவார் தெரியுமா? அது மாதிரி இருக்கும். இரண்டு பேர் புகுந்து கொள்ளலாம் அந்த டிராயரில்!**



முழங்காலைத் தாண்டாமல் தொடையுடன் ஒட்டியபடி கொஞ்சமாவது இறுக்கமாக டிராயர் தைத்துக் கொள்ள எங்களுக்கு ஆசை. அப்பா அனுமதிக்கவே இல்லை! அதே போல அப்போது சில மாணவர்கள் புத்தகங்களை ஒரு அலுமினியம் பெட்டியில் வைத்து ஸ்டைலாக எடுத்து வருவார்கள். ஆனால் அதைப் பார்த்து ஆச்சர்யப்படுவோமே தவிர அதற்கு ஆசைப்பட்டதில்லை.

காய்கறிப் பை போல ஒரு யானைக்கலர் பையில்தான் புத்தகங்கள் எடுத்துச் செல்வேன். பையில் அழகான ரோஸ் படம் வரைந்து அதில் 'மலர்ந்த முகமே வாழ்க்கையின் இன்பம்' என்று எழுதி இருக்கும். அவ்வப்போது டிபன் பாக்ஸ் திறந்துகொண்டு மோர்சாதம் உள்ளே கொட்டி, பையைத் திறந்தாலே ஒருவித வாடை வரும். சனி ஞாயிறுகளில் துவைத்து வைத்துக்கொள்ள வேண்டும்!

எஸ் எஸ் எல் சி வந்தபோது தையல்காரரை மாற்றும் சந்தர்ப்பம் வந்தது. அப்போதைய தீபாவளிக்கு நாகரீக சட்டைத்துணி, பாண்ட் க்ளாத் எடுத்ததும் அப்பாவிடம் கோரிக்கை வைத்து ரயில்வே ஸ்டேஷனைத் தாண்டிச் சென்றால் புதாறு பாலத்துக்கு முன் இருந்த பாரத் டெய்லரிடம் எல்லோரும் போடும்படி தைத்துக் கொண்டோம். டெய்லரே பெல்ஸ் அணிந்து, இளவயதினராய், லேசான வளைந்த மீசையுடன் மாடர்னாக இருந்தார்.

அளவெடுக்கும் மீட்டர் ஸ்ட்ரிப்பை கழுத்தில் மாலையாக எப்போதும் மாட்டியிருந்தார். நாங்கள் துணியைக் கொடுத்ததும் எங்களை நிறுத்தி இன்ச் இஞ்ச்சாக அளவெடுத்துக் கொண்டார். பெல்ஸ் இவ்வளவு வைத்தால் போதுமா, இன்னும் வைக்கவா, சைட் பாக்கெட்டா என்றெல்லாம் எங்களை அவர் கேட்டுக் கேட்டுக் குறித்துக் கொண்டதே ஏதோ நாங்கள் வேறு உலகத்துக்கு வந்து விட்ட மாதிரி இருந்தது!

சட்டையில் ஒரு பக்கம் மட்டும் பாக்கெட் வைத்துத் தைத்துத் தந்தார். காலரைக் கொஞ்சம் நீட்டி அட்டை வைத்தது போல கெட்டியாக ஸ்டைலாக தைத்திருந்தார். அதுவரை ஏழுமலை இரண்டு பக்கங்களிலும் பாக்கெட் வைத்துக் கொடுத்துக் கொண்டிருந்தார்! காலரில் ஒரு விசேஷமும் இருக்காது.

கொஞ்ச நாட்களுக்கு அந்த ஒரு ட்ரெஸ் கொஞ்சம் நாகரீகமாகவும், மற்றவை சந்திரபாபு நீதி ட்ரெஸ்ஸாகவும் இருந்தது. பிறகு மெல்ல மெல்ல மாறியது. சீருடையில் வழுவழு வெள்ளை சட்டை பள்ளி இறுதி நாட்கள் வரை போடவே இல்லை!

வெள்ளை சட்டை மீதான ஆர்வம், ஆசை இருந்துகொண்டே இருந்தது.

வேலைக்குச் சென்ற பிறகு அவ்வப்போது வெள்ளைச் சட்டை வாங்கி கொண்டே இருக்கிறேன். அது ஒன்று சலவைக்குப் போன இடத்தில் காணாமல் போய்விடும். அல்லது அதில் ஏதாவது கறை பட்டு விடும். உபயோகிக்க முடியாமல் போகும். இதுநாள் வரையிலும் வாங்கி இரண்டு மூன்று முறைகள் மட்டுமே போடமுடிகிறது வெள்ளைச் சட்டைகளை!

அதே போல கருப்புச்சட்டை.

கருப்புச்சட்டை போடவும் ஆசை உண்டு. முன்னால் அம்மா, இப்போது பாஸ் அதற்குத் தடைக்கல்! ஒரு சட்டை வாங்கி தைத்து வைத்திருக்கிறேன். எப்போதாவதுதான் போடமுடிகிறது! ஓரிருமுறை அதை அணிந்த அன்று ஏதோ ஒரு துக்கச் செய்தி காதில் பட, செண்டிமெண்ட் வேறு தாக்கத் தொடங்கியது. எனவே அதை எடுத்து அணிய மனதில் ஒரு தயக்கம் நமக்கே வந்து விடும். திருமணம் போன்ற விழாக்களுக்கு அதை அணிந்து செல்வதும் உசிதம் கிடையாது.

ஒருமுறை தலைமை அலுவலக மீட்டிங்கில் என் எதிர்ப்பைக் காட்டவேண்டி கருப்புச் சட்டை அணிந்து சென்றிருந்தேன். நான் எதிர்ப்பு காட்டதான் அதை அணிந்திருக்கிறேன் என்று கடைசிவரை எனக்கு மட்டுமே தெரிந்திருந்தது!

**[மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்]**

# கதம்பம் :: ஸ்ரீராம்

அக்டோபர் என்று போட்டிருந்தாலும், இப்போதல்ல. கொஞ்சம் பழைய செய்தி!




==================

மனிதன் போதும் என்று சொல்லும் ஒரே பொருள் உணவுதான்.

பசியாய் இருந்தால் சரி... வெளியில் நண்பர் வீட்டிலோ எங்கோ வயிறு புடைக்கச் சாப்பிட்டு விட்டு வீட்டுக்கு வருகிறீர்கள். இந்த விஷயம் தெரியாமல் உங்கள் வீட்டிலும் நிறைய ஐட்டங்கள் செய்து வைத்துக்கொண்டு உங்களுக்காக சாப்பிடாமல் காத்திருக்கிறார்கள். இலையை போட்டு உட்கார வைக்கிறார்கள்... எப்படி இருக்கும்!




==================================================================

இவ்வளவு நுணுக்கி நுணுக்கி கஷ்டப்பட்டு எழுதி என்ன பிரயோஜனம்? எனக்கு ஒன்றும் புரியவில்லை! தமிழ்தான். அந்தந்த ஊர்க் கோவில்களில் இருக்கும் இதுபோன்ற கல்வெட்டுகளில் எழுதி இருக்கும் விஷயங்களை இப்போது உள்ளவர்களுக்குப் புரியும் வகையில் எழுதி வைத்தால் எல்லோருக்கும் புரியுமே...



============= =========

பேஸ்புக்கிலிருந்து..

பல வருடங்களுக்குப் பிறகு குலதெய்வம் கோவில் சென்றோம். அப்போதே இனி வருடா வருடம் சென்று தரிசித்து வரவேண்டும் என்று முடிவு செய்து கொண்டோம். இறைவன் மனதில் என்னவோ... இந்த வருடம் இதுவரை நகர முடியவில்லை. சென்றமுறை குலதெய்வம் கோவில் போனபோது அங்கு சுற்று வட்டாரத்திலிருந்த கோவில்களும் சென்று வந்தோம். அதில் ஒன்று இது!

**Sriram Balasubramaniam**

June 15, 2019 at 8:55 AM ·

வெளியே தேடாதீர்கள். உள்ளே இருக்கிறான் கடவுள்.



Sriram Balasubramaniam
June 15, 2019 at 8:54 AM ·

கைகூப்பி வேண்டி நின்று வெளியில் வந்தால் வெளிச்சம் தெரியும்.





[மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்]()

# பா◌ாட்டும் பதமும் :: ஸ்ரீராம்

உலகத்தை மறந்து வந்து உறவு சொல்லி விளையாடு!

1976 ஆம் ஆண்டு வெளிவந்த படம். விஜயகுமார் - ராஜ்கோகிலா நடித்த படம். இசை எம் எல் ஸ்ரீகாந்த். இந்த விவரங்கள் தவிர வேறு விவரங்கள் கிடைக்காத ஒரு படம் 'நினைப்பது நிறைவேறும்'

எம் எல் ஸ்ரீகாந்தும் வாணி ஜெயராமும் பாடி இருக்கும் இந்தப் பாடல் வெகு இனிமை, வெகு பிரபலம் அப்போது.

எம் எல் ஸ்ரீகாந்த் 'உத்தரவின்றி உள்ளே வா' படத்தின் "காதல் காதல் என்று பேச கண்ணன் வந்தானோ" பாடலிலும் ஹம்மிங் செய்திருப்பார். அவர் பற்றிய விவரங்கள் தேடக் கிடைக்கவில்லை. ஆனாலும் இனிமையான குரல். உடன் பாடும் வாணி ஜெயராம் பற்றிச் சொல்லவே வேண்டாம். பாடலுக்கான காட்சியும் கிடைக்காததால் சும்மா இயற்கைக் காட்சிகளை வைத்து பாடலை என் போன்றவர்களுக்காக இணையத்தில் ஏற்றியிருக்கிறார்கள்!

பாடல் எழுதி இருப்பவர் பெயர் மணியாம். தயாரிப்பாளரே பாடல் எழுதி இருப்பாரோ என்னவோ...

பாடலின் ஆரம்பத்தில் மிக இனிமையான இசையைத் தொடர்ந்து மிக அழகான ஹம்மிங். தொடரும் பாடல் டியூனும் குரலும்... இருங்கள் மறுபடி மறுபடி அதையே சொல்லிக் கொண்டிருக்கிறேன்... கேளுங்களேன்..

சரணங்களில் முதல் வரி முடித்ததும் ஒரு டிங்க்டிங்க்டிங் இசை... அப்புறம் சரணத்தை முடிக்கும் வரிகள் BHAAவத்தோடு பாடப்பட்டிருக்கும்.

நினைப்பது நிறைவேறும் நீ இருந்தால் என்னோடு
நடப்பது நலமாகும் நான் இருந்தால் உன்னோடு
நினைப்பது நிறைவேறும் நீ இருந்தால் என்னோடு
நடப்பது நலமாகும் நான் இருந்தால் உன்னோடு

இருவரும் சேர்ந்திருந்தால் அன்போடு
இன்றுபோல் வாழ்ந்திடலாம் பண்போடு

ஒருவரின் இதயத்தில் ஒருவர் குடியிருந்தால்

**மின்நிலா 027**

ஒருவரில் இருவரையும்  ஒருடலாய் கண்டிடலாம்
ஒருவரின் இதயத்தில்  ஒருவர் குடியிருந்தால்
ஒருவரில் இருவரையும்  ஒருடலாய் கண்டிடலாம்

தனிமை உனக்கேது.... தாங்கும் இதயம் எனக்கேது
தனிமை உனக்கேது.... தாங்கும் இதயம் எனக்கேது
உலகத்தை மறந்து வந்து  உறவு சொல்லி விளையாடு
உலகத்தை மறந்து வந்து  உறவு சொல்லி விளையாடு

தேன்சுவைத் தமிழ் பேசி  தெம்மாங்கு இசைபாடி
இருவரும் பெருமையுடன் இன்பமெல்லாம் கண்டிடலாம்
தேன்சுவைத் தமிழ் பேசி  தெம்மாங்கு இசைபாடி
இருவரும் பெருமையுடன் இன்பமெல்லாம் கண்டிடலாம்

காதல் கவிபாடு... காலமெல்லாம் உறவாடு
காதல் கவிபாடு... காலமெல்லாம் உறவாடு
மனதை பறிகொடுத்தேன்  மறந்து வாழ முடியாது
மனதை பறிகொடுத்தேன்  மறந்து வாழ முடியாது

**>>>>> YOUTUBE LINK**

மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்

# நேர்மறை செய்திகள்

ராஞ்சி: மருத்துவ குணம் வாய்ந்த கருங்கோழி பண்ணை அமைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார் தோனி.



இந்திய அணியின் முன்னாள் கேப்டன் தோனி. ஓய்வுக்கு பின் ராஞ்சியில் உள்ள 43 ஏக்கர் நிலத்தில் இயற்கை முறையில் விவசாயம், பால், கோழி, வாத்து பண்ணைகள் அமைத்து பயனுள்ள முறையில் நேரத்தை செலவிடுகிறார். அடுத்து, கருங்கோழி பண்ணை அமைக்க திட்டமிட்டுள்ளார். இதற்காக மத்திய பிரதேசத்தின் ஜபாவ் மாவட்டத்தை சேர்ந்த விவசாயி வினோத் மெஹ்தாவிடம் இருந்து 2,000 கருங்கோழி குஞ்சுகளை வாங்க உள்ளார்.

வினோத் கூறுகையில், ' 'தோனியின் பண்ணையை சேர்ந்த நிர்வாகிகள் என்னை தொடர்பு கொண்டு 'ஆர்டர்' கொடுத்தனர். முன்பணமும் செலுத்தி விட்டனர். டிச. 15க்குள் ராஞ்சிக்கு அனுப்பும்படி கேட்டுக் கொண்டுள்ளனர். இந்தியாவின் பிரபல கிரிக்கெட் வீரரின் பண்ணைக்கு 2,000 கருங்கோழி குஞ்சுகளை வழங்குவதில் பெருமை அடைகிறேன்,' ' என்றார்.

மருத்துவ குணம் கொண்ட கருங்கோழி அரிய வகையை சேர்ந்தது. குறைவான கொழுப்பு, அதிக புரதச்சத்து கொண்டது. மற்ற கோழிகளுடன் ஒப்பிடுகையில் கூடுதல் ருசியாக இருக்கும். ரத்தம், இறைச்சி என எல்லாமே கருப்பாக இருக்கும். மத்தியப்பிரதேசத்தில் உள்ள மலை வாழ் மக்கள் இவ்வகை கோழிகளை அதிகம் வளர்க்கின்றனர். ஒரு கிலோ கருங்கோழி கறி 1,000 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. கருங்கோழி முட்டை 20-40 ரூபாயாக உள்ளது. இந்தியா முழுவதும் கருங்கோழியின் தேவை அதிகமாக உள்ளது. இதனை உணர்ந்து தான் சாமர்த்தியமாக கருங்கோழி பண்ணை அமைக்கிறார் தோனி.

====

# புத்தகம் தயாரித்து நூலகம் நடத்தும் முதியவர்

எரியோடு : கொரோனா அச்சத்தையும் பொருட்படுத்தாமல், 74 வயதிலும் பொதுச்சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் தானே தயாரித்த புத்தகங்களுக்காக ஒரு முதியவர் திண்டுக்கல் மாவட்டம் எரியோட்டில் நூலகத்தை நடத்தி வருகிறார்.

வாழ்கிற காலத்தில் தனக்காக அன்றி மற்றவர்களுக்காக, வசிக்கும் ஊருக்காக, நாட்டுக்காக முடிந்ததை செய்ய நினைப்பவர் பலருண்டு. அவர்களுள் சிலரே நினைப்புக்கு செயலாக்கம் தந்து நடைமுறை படுத்துவர். இவர்களுள் ஒருவரே எரியோடு கே.ராமசாமி 74. நல்ல தகவல்களை பலரும் தெரிந்து கொள்ளவும், கிராமத்தினரிடம் படிப்பு பழக்கம் உருவாக்க வேண்டும் எனவும் களப்பணியில் இறங்கியுள்ளார்.பதினாறு வயது முதல் காய்கறி கடை நடத்தி வந்தார். 10 ஆண்டுகளாக பழக்கடையாக மாற்றினார்.

வயதானதால் அடுத்த தலைமுறைக்கு வழிகாட்டும் வகையில் கடை நிர்வாகத்தை தனது மகனுக்கு மாற்றிவிட்டு, இந்தச் சேவையில் இறங்கிவிட்டார். சில ஆண்டுகளாக ஓய்வு வாழ்க்கையை மேற்கொண்ட இவர், தனது வாழ்க்கை காலத்தை அர்த்தமுள்ளதாக செலவிட தீர்மானித்தார். தினசரி செலவுக்கு மகன் தரும் 110 ரூபாயில் பல நாளிதழ்களை வாங்கி படிக்கிறார். நல்ல விஷயங்கள், கருத்துகள் என கருதும் செய்திகளை வெட்டி எடுத்து சேகரிக்கிறார்.

அதனை நகல் எடுத்து 100 பக்கங்கள் கொண்ட புத்தகமாக வடிவமைக்கிறார். அதற்கு தலைவர்களின் பெயர்களை எழுதி அடையாளமிடுகிறார். இவ்வாறு 100க்கும் மேற்பட்ட புத்தகங்களை கடந்த வாரம் வரை தயார் செய்துள்ளார். இவற்றை மக்கள் படித்து பயன்பெற வேண்டும் என்ற நோக்கில் எரியோடு பயணியர் நிழற்கூடத்தில் நூலகம் போல அமைத்துள்ளார். சுழற்சி முறையில் மக்கள் எடுத்து செல்ல வசதியாக பதிவேடும் பராமரிக்கிறார். மாணவர்கள், பொதுமக்கள் என பல தரப்பட்டவரும் இவர் தயாரித்த புத்தகங்களை படிக்க துவங்கியுள்ளனர். இவரை பாராட்ட: 95669 53452.




**வாஷிங்டன்:அமெரிக்காவின் மடர்னா மருந்து நிறுவனம் உருவாக்கிய கொரோனா தடுப்பூசி 94.5 சதவீதம் பயன் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

**கொரோனா வைரஸை கட்டுப்படுத்த தடுப்பூசியை கண்டுபிடிக்கும் முயற்சியில் உலகின் பல்வேறு நாடுகள் ஈடுபட்டுள்ளன. ரஷ்யா, அமெரிக்கா, சீனா, இங்கிலாந்து போன்ற நாடுகள் கொரோனா தடுப்பூசி கண்டுபிடிக்கும் போட்டியில் முன்னிலையில் உள்ளன. தடுப்பூசி தயாரிக்கும் முயற்சியில் உலகம் முழுவதும் 11 நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன.**
**இந்த நிறுவனங்களில் அமெரிக்காவின் மடர்னா இங்க் மருந்து நிறுவனமும் ஒன்று. அந்நிறுவனம் உருவாக்கிய கொரோனா தடுப்பூசியின் இறுதிகட்ட பரிசோதனைகள் நடைபெற்று வந்தது.**




இந்நிலையில், மடர்னா நிறுவனத்தின் கொரோனா தடுப்பூசி 94.5 சதவீதம் பயனுடையது என அந்நிறுவனம் அறிவித்துள்ளது. 30 ஆயிரம் பேரிடம் நடத்தப்பட்ட பரிசோதனையில் தடுப்பூசி 94.5 சதவீதம் கொரோனா வைரசை கடுப்படுத்தி உள்ளது.
கொரோனா வைரசால் தீவிரமாக பாதிக்கப்பட்டவர்களிடமும் இந்த மடர்னா தடுப்பூசி நல்ல செயல்திறனை கொண்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஏற்கனவே, மற்றொரு அமெரிக்க மருந்து நிறுவனமான பைசர் நிறுவனத்தின் கொரோனா தடுப்பூசி 90 சதவீதம் கொரோனா வைரஸ் பாதிப்பில் இருந்து மனிதர்களை பாதுகாக்கிறது என ஆய்வு முடிவில் தெரியவந்தது நினைவிருக்கலாம். இந்நிலையில், மற்றொரு தடுப்பூசி வந்துள்ளது நம்பிக்கையூட்டுகிறது.

=====

## பலே (பால்) பாண்டியா !




ரூ.2.20 லட்சம் கொரோனா நிதி வழங்கியுள்ள மதுரை யாசகர்!

====

## மாயமான 76 குழந்தைகளை 3 மாதங்களில் மீட்ட பெண் போலீஸ்



புதுடில்லி: டில்லியில் காணாமல் போன 76 குழந்தைகளை, 3 மாதங்களுக்குள் கண்டுபிடித்த சீமா டாக்கா என்ற பெண் போலீசுக்கு, பதவி உயர்வு வழங்கப்பட்டது.

டில்லியில் காணாமல் போன குழந்தைகளை கண்டுபிடிக்கும் போலீசாருக்கு புதிய ஊக்க திட்டம் ஒன்றை, கடந்த ஆக., மாதம் டில்லி காவல்துறை அறிவித்தது. இத்திட்டத்தில்,

12 மாதங்களுக்குள், 50 குழந்தைகளுக்கு மேல் கண்டுபிடிக்கும் போலீசாருக்கு, பதவி உயர்வு அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், தலைமைக் காவலர் சீமா தாகா என்பவர், கடந்த 3 மாதங்களுக்குள், காணாமல் போன, 76 குழந்தைகளை கண்டுபிடித்து அசத்தி உள்ளார். இதில் 50 குழந்தைகள் 14 வயதுக்கும் குறைவானவர்கள். டில்லி தவிர, பஞ்சாப், மேற்குவங்க மாநில குழந்தைகளும் இதில் அடக்கம். குழந்தைகளை கண்டுபிடிக்க கடந்த 3 மாதங்களாக அவர், பல்வேறு இடங்களுக்கும் பயணம் மேற்கொண்டு குழந்தைகளை மீட்டுள்ளார்.

சீமாவுக்கு வாழ்த்து தெரிவித்த டில்லி போலீஸ் கமிஷனர், அவருக்கு பதவி உயர்வு வழங்கி கவுரவித்தார். புதிய ஊக்கத் திட்டத்தின்கீழ், டில்லியில் முதல் பதவி உயர்வு பெறுபவர் சீமா என்பது குறிப்பிடத்தக்கது.

=====

**மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்**

**வாட்ஸ் அப் மூலம் வந்த தகவல் கட்டுரை :**



**( நன்றி : ஜீவன் தாஸ் - நண்பர், முன்னாள் அசோக் லேலண்ட் என்ஜின் பிரிவு அதிகாரி )**

# மார்வாடிகளின் வணிக ரகசியம்! :: ஜீவன் தாஸ்

பிர்லா, கோயங்கா, மித்தல், கன்ஷியாம்தாஸ், ஓஸ்வால், சிங்கானியா, சேத், டால்மியா, பஜாஜ், பொத்தார், பிரமல், ஜுன்ஜுன்வாலா என பல பெயர்களில் உள்ள மார்வாடிகளின் ஆதிக்கத்தில் தான் இந்திய வணிகம் முழுவதும் உள்ளது எனச் சொல்லலாம்.

மார்வார் எனும் கிழக்கு ராஜஸ்தான் பகுதியிலிருந்து வந்தவர்கள் மார்வாரிகள். இவர்கள்தான் மார்வாடிகள் என அழைக்கப்படுகின்றனர். வறண்ட பாலைவனப் பகுதியானதால் வளங்களை சிக்கனமாகத் சேமித்து வாழத்தெரிந்த சமூகம் அது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் மெல்ல மெல்ல பஞ்சாப், உத்தரப் பிரதேசம், வங்காளம், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா என பரந்து விரிந்து, முதலாம் உலகப்போரின்போது கிட்டத்தட்ட வட இந்தியா முழுவதும் வணிக உலகில் விஸ்வரூபம் எடுத்தவர்கள் மார்வாடிகள்.

நம் இலக்கியங்களிலும் திரைப்படங்களிலும் கொடூர வில்லன்கள் அல்லது காமெடியன்களாகத் தான் சேட்டுகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இன்னமும் இவர்களை “நம்பள் நாளே வரான். பைசா கேக்கறான். நிம்பள் கொடுக்கிறான்” என்று பேசுவதாகத் தான் நினைத்துக் கொண்டிருக்கிறோம். உழைக்காமல் ஏழைகளிடம்

வட்டிக்காசு வசூலித்து, அவர்கள் ரத்தத்தை உறிஞ்சி வாழ்பவர்கள் என்பதில் உண்மை இல்லாமல் இல்லை. ஆனால் மிகுந்த வறியவனாய், வந்தேறியாய் வரும் ஒரு மார்வாடி எப்படி செல்வந்தனாகிறான் என்பது யாரும் அறியாத கதை.

அதை விரிவாக அறியும் வாய்ப்பு வந்தது- The Marwaris- from Jagat Seth to the Birlas என்ற நூல் மூலமாக, மார்வாரிகள் பற்றி 50 ஆண்டுகளாக ஆராய்ந்து எழுதியிருக்கிறார் ஆசிரியர் தாமஸ் டிம்பெர்க்.

குரு சரண்தாஸ் எழுதிய முன்னுரையே முப்பது பக்கங்கள் என்றாலும் அது ஒரு பிரமாதமான ட்ரெயிலர் என்று சொல்லலாம். 1971-ல் மார்வாடிகளின் வணிக எழுச்சி பற்றி பிஹெச்.டி. ஆய்வாளரான டிம்பெர்க்கை சந்திக்கிறார் குரு சரண்தாஸ். இந்தியாவின் உள் நாட்டு வணிகம் முழுவதையும் மார்வாடிகள் எப்படி தங்கள் கட்டுக்குள் கொண்டு வந்தார்கள் என்று அறிகிறார்.

ஒரு புதிய பொருளை மிக விரைவில் அது பற்றி தெரிந்து கொண்டு அதை வாங்கி, விற்று வணிகம் நடத்தும் இவர்களுக்கு ரிஸ்க் எடுப்பது நிஜமாகவே ரஸ்க் தின்பது போலதான் எனத் தோன்றுகிறது. தந்தி வராத காலத்தில் புறாக்களை வைத்தும், தந்திகளை முதலில் பயன்படுத்தியும், திருட்டுத்தனமாக ரேடியோ கருவிகளை வைத்துக் கொண்டும், லண்டன் பங்குச் சந்தை விலை முதல் உள்ளூர் விலை வரை எல்லாவற்றையும் எப்படி வேகமாக அறியத் துடித்தார்கள் என்று படித்தபோது வியப்பாக இருந்தது.

சேத்தின் வியாபார நிர்வாக வழிமுறைகள் அலாதியானவை. ‘கடி’ என்ற பஞ்சு மெத்தைதான் சேத்தின் அலுவலகம். முனிம் என்கிற கணக்கர்தான் கணக்குகள் எழுதுவார். உள் அறையில் சரக்குகள் இருக்கும். பின் கட்டில் பிராமணர்கள் சமைப்பார்கள்.

புதிதாக வரும் மார்வாடி இளைஞர்களுக்கு அங்கேயே தங்கி, வேலை செய்யும் வசதி செய்து தரப்படுகிறது. முதலில் ஹுண்டி எனும் கணக்கியல் பயிற்சி. பின் சரக்கு பரிமாற்றம். பிறகு ஏதாவது ஒரு கிளையில் வேலை. தனியாக தொழில் செய்ய நினைத்தால் நிதிதாரராக அல்லது பங்குதாரராக சேத்தே உதவி செய்வார்.

முதலாளியின் உள்ளுணர்வு எல்லா முடிவுகளுக்கும் காரணி. நம்பிக்கைதான் வியாபார மந்திரம். கூடி வாழ்தல்தான் பிழைக்கும் வழி என எத்தகைய போட்டி என்றாலும் கூடியே வாழ்தல். எல்லா கணக்கும் அன்றன்றே பைசல் செய்தல். போட்டியாளர், பகையாளி என யாராக இருந்தாலும் கடன் கொடுத்தும் வாங்கியும் தொழில் நடத்துதல் என பிரம்மிக்க வைக்கும் வழிமுறைகள்.

இவர்கள் பிரிட்டிஷ்காரர்களுக்கும் கடன் வழங்கியிருக்கிறார்கள். விடுதலைப் போராட்டத்துக்கும் நிதி வழங்கி யிருக்கிறார்கள். தொழிலில் வரிகள் நெருக்கடி, வெள்ளையரின் சூழ்ச்சி என வரும்போதெல்லாம் பணத்தை நிலத்தில் போட்டு நிலச்சுவான்தார்கள் ஆனார்கள். எந்த புதிய தொழில் வந்தாலும் ஒரு கை பார்த்தார்கள். பிட்ஸ் பிலானி, பனாரஸ் ஹிந்து பல்கலைக்கழகம் என அமைத்து கல்வி அமைப்பிலும் கால் பதித்தார்கள்.

அதிக அளவில் ஜெயின் வம்சம் என்றாலும் இந்து மதத்தின் நீரோட்டத்தில் கலந்தார்கள். மார்வாரி மொழியைக் காட்டிலும் இந்தியை வளர்த்தார்கள். இந்தி–இந்து–இந்தியா என்ற கட்டமைப்பில் மார்வாடிகளின் வணிக நோக்கம் தெளிவாகத் தெரிகிறது. பிற்காலத்தில் கலப்பு மணம் புரிந்தாலும் கவனமாய் செல்வம் காத்தார்கள். பெண்கள் மெல்ல படிக்க ஆரம்பித்தார்கள்.

கீதா பிரமல் போன்றவர்கள் பிஸினஸ் குடும்பத்தில் பிறந்து பிஹெச். டி. செய்தார்கள். ராம் மனோஹர் லோஹியா, கமல்நாத் போன்றவர்கள் அரசியலுக்கு வந்தார்கள். லாலு பிரசாத் யாதவின் உலகப் பிரசித்தி பெற்ற ரயில்வே துறை பட்ஜெட்டை தயாரிக்க உதவிய ஐ. ஏ. எஸ். அதிகாரி கூட மார்வாடிதான் என்று அறிகையில் அந்த சமூகத்தின் வீச்சு புரிகிறது. புத்தகம் நிறைய எல்லா சேட்டுகளின் பெயர்களும் சொந்தங்களும் அவர்களின் தொழில்களின் வரலாறுகளும் திகட்டத் திகட்டக் கொடுக்கப்படுகின்றன.

உலகமயமாக்கலை தடுக்கும் ராகுல் பஜாஜ் முயற்சிகளும், உலக மயமாக்கத்துக்குப் பிறகு நிர்வாக முறைகளை மாற்றிய குமாரமங்கலம் பிர்லாவின் முயற்சிகளும் அந்த சமூகத்தின் வளைந்து கொடுக்கும் தன்மையை எடுத்துக் காட்டுகிறது.

தற்போது போர்பஸ் பத்திரிகை வெளியிடும் இந்திய பில்லியனர்களில் நான்கில் ஒரு பங்கு மார்வாடிகள் இருக்கிறார்கள். இவர்கள் இல்லாத தொழில்கள் இல்லை எனச் சொல்லலாம். ஏழாவது தலைமுறை காணும் பிர்லாவை அமெரிக்காவின் போர்ட் அல்லது ராக்பெல்லருடன் ஒப்பிடலாம் என்கிறார் ஆசிரியர்.

மார்வாடியைப் போல பணக்கார வியாபாரியாக என்ன வழி என்று கேட்கையில் ஒரு மார்வாடியே இதை நகைச்சுவையாய் சொல்கிறார்: “ஒரு மார்வாடியின் மகளை கட்டிக்கொள்ளுங்கள். அவர்கள் உங்களை பணக்கார வியாபாரியாக மாற்றிக் காட்டுவார்கள்” .

=====

[மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்]

# மைசூர் அரண்மனைக் காட்சிகள் தொடர்கின்றன kayjee

**கம்பி வலை - புறாக்களுக்கு நோ என்ட்ரி ??**



**இல்லையேல் புறாக்கள் குடியேறியிருக்கும் !!**



## ஆனால் ராஜாக்கள் காலத்தில் கம்பி வலை இருந்திருக்குமா?



## யோசிப்போம்.



## சிம்மாசனம் இங்கே! ராஜா எங்கே?



## கருஞ்சிறுத்தை கர்ஜிக்கிறது !



## யாரும் அருகே செல்லாதீர்கள் !



Gr--rrr--rrrr--rr--rrr



## மின்நிலா 027

## ஆனாலும் புறாக்கள் கம்பியில் அமர்வதை -----



## தடுக்க இயலாது !




## ஓவியம்




## சிற்பமா / ஒரிஜினல் யானைத் தலையா?



## பார்த்துச் சொல்லுங்கள்






ஓம் விக்னேஸ்வராய நமஹ !



## பரந்த வானம்; உயர்ந்த மாளிகை



## அரண்மனைத் தூண்கள்



## மாளிகை நிழலில் மனிதர்கள்



## ஆயிரம்  வாட் வெளிச்சம் !



## நிழலில் ஓய்வு எடுக்கும் பார்வையாளர்கள்



மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்

## மின்நிலா 027

# உங்களைப்பற்றி நீங்கள் ...

வாரம் ஒரு வலைப்பதிவர்/ வாசகர் என்ற தலைப்பில், எங்கள் ப்ளாக் வாசகர்கள் எழுதுகின்ற வலைப்பூக்கள் பற்றி மின் நிலாவில் அடுத்த வாரத்திலிருந்து எழுத இருக்கிறோம்.

வலைப்பூவர்களும், வலைப்பூவையர்களும், வலைமொட்டுகளும் வாசகர்களும் தங்கள் பெயர், வலைப்பூ பெயர், வலைப்பூ சுட்டி ஆகிய விவரங்களுடன், தங்கள் வலைப்பூவில் எந்த விஷயங்களுக்கு அவர்கள் முன் உரிமை கொடுத்து எழுதுகிறார்கள் , என்பதையும், அவர்களை எழுத வைப்பது எது - அல்லது 'நான் ஏன் எழுதுகிறேன்' என்ற தலைப்பில் அவர்களைப் பற்றிய ஒரு சுயபுராணமும் எழுதி, அதை

**engalblog@gmail.com**

என்னும் மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.

வலைப்பூ நடத்தாத எங்கள் ப்ளாக் வாசகர்கள், அவர்களைப் பற்றியும், அவர்களுடைய படிக்கும் ஆர்வம் மற்றும் எழுதும் ஆர்வம் குறித்தும் எழுதி அனுப்பலாம்.

எங்களுக்கு வந்து சேரும் அதே வரிசையில், வாரம் ஒருவர் பற்றிய விவரங்களை வெளியிடுகிறோம்.
எங்கள் ப்ளாக் ஆசிரியர்கள் குழு.

இந்த மின்நிலா இதழ் பற்றிய உங்கள் கருத்துகளை,
**engalblog@gmail.com**
என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும் !



வசுமதி மணியன்